இயல்
ஒன்று

# கவிதையியல்

9B314E




தமிழ் தொன்மையான கவிதை மரபைக் கொண்டது. இயற்கையோடு இயைந்த வாழ்வியல் அனுபவங்களைக் கவிதையில் முன்வைத்ததில் மற்ற உலகமொழிகளைவிடத் தமிழ் முதன்மை பெறுகிறது.

அத்தமிழ்க் கவிதையின் ஊற்றிலிருந்து சில துளிகளைப் பருகுவதற்காக, கவிதையியல் என்னும் இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. இவ்வியலில் இடம்பெற்றுள்ள கவிதை- ஒரு பார்வை என்னும் கட்டுரை கவிதையைச் சுவைக்கவும் படைக்கவும் தூண்டுகிறது. நாட்டுப்புறப்பாடல்கள் மக்கள் மொழியில் வாழ்க்கை நிகழ்வுகளை நமக்குள் இசைக்கிறது. சித்தர் பாடல்கள் மெய்யியல் சிந்தனையை வளர்ப்பதாகவும், தனிப்பாடல்கள், கருத்துக் கருவூலமாகவும் சொற்களஞ்சியத் திறனைப் பெருக்குவதாகவும் அமைந்துள்ளன. சிற்றிலக்கியப் பாடல்கள், அன்பின் மேன்மையைப் பேசுகின்றன.

## கற்றல் நோக்கங்கள்

- *தமிழ்க் கவிதைகளின் வகைமைகளை அறிந்துகொள்ளுதல்.*
- *தமிழ்க் கவிதைகளின் பன்முகப்பட்ட பாடுபொருள்களைப் புரிந்துகொள்ளுதல்.*
- *தமிழ்க் கவிதைகளின் உத்திகளைப் பயன்படுத்த அறிதல்.*
- *மரபு மற்றும் புதுக்கவிதைகளைப் படைக்கும் திறன் பெறுதல்.*

## பாடப் பகுதி

- கவிதை–ஒரு பார்வை
- நாட்டுப்புறப்பாடல்கள்
- தனிப்பாடல்கள்
- சித்தர் பாடல்கள்
- சிற்றிலக்கியங்கள்
- ஓவியப்பா



11th Advance Tamil - FINAL.indd 1 14-02-2019 17:27:52

# இயல் ஒன்று

## கவிதை – ஒரு பார்வை

கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல் வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிக்கின்றன.

தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. உலகின் பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதைப்போலவே இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள், தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.

### சங்ககாலக் கவிதைகள்

சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகள், கலைகள், கல்வி, அரசியல், பொருளாதாரம், வணிகம், வேளாண்மை குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

அகம்: மாந்தர், அகமனத்தில் துய்க்கின்ற காதல், அன்பு, கருணை முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகத்திணை.

புறம்: மாந்தர், புறவாழ்வில் கொண்டாடுகின்ற வீரம், கொடை, புகழ் முதலான பண்புகளை வெளிப்படுத்துவது புறத்திணை.

அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை.

### சிறகிழந்த நாரை

எட்டுத்தொகையில் ஒன்றான குறுந்தொகையில், தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப்பாடல்,

***குணகடல் திரையது பறைதபு நாரை***
***திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை***
***அயிரை ஆரிரைக் கணவந் தாங்குச்***
***சேயள் அரியோட் படர்தி***
***நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.***

*குறுந்தொகை.128*

கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில் நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல்கடற்கரையிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது. அதுபோல, பெறற்கரியவளாகிய தலைவியைப் பெறும்பொருட்டுத் தலைவனின் நெஞ்சமும் வருந்தியிருந்ததாம்.

### நீரும் நிலனும்

எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,



11th Advance Tamil - FINAL.indd 2 14-02-2019 17:27:52

……………….

*நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்;*
*உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;*
……………………                                    புறம்.18

உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர். இந்த உடலானது, உணவினாலானது. உணவு என்பது யாது? நிலத்தொடு நீர் சேர்வதுதான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல்குறித்துக் கூறி, நீர்வளம் பெருக்க, பாண்டிய மன்னனை அறிவுறுத்துகிறார்.

## அறநிலைக் கவிதைகள்

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாவிய அறிஞர்களால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள், கீழ்க்கணக்கு நூல்களுள் குறிப்பிடத்தக்கது .

## காப்பியக் கவிதைகள்

மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும்பாடிச்செல்கின்றன.உரையொடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, பசியின்றிவாழ்தல்,வாழ்வின் நிலையாமைஎனக் காப்பியக்கவிதைகளின் தளம் பரந்துபட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் மணிமேகலைக்காப்பியத்தில் அமைந்த கவிதை இங்கு நோக்கத்தக்கது.

*இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா*
*புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்*
*மிக்க அறமே விழுத்துணை ஆவது*

மணிமேகலை, சிறைசெய்காதை 135–138

## பக்திக் கவிதைகள்

காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக்கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன்மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்தி மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

## சிற்றிலக்கியக் கவிதைகள்

பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதியவடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின. சிற்றிலக்கியத்தின் வடிவங்களான, கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன. எனினும் பள்ளு, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பின.

## தனிப்பாடற் கவிதைகள்

புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. சிலேடை, விடுகதை, சொற்புதிர் போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டுகளாக நமக்குக் கிடைக்கின்றன.

## தமிழ்க் கவிதையின் மரபு வடிவம்

தமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீனகாலம் வரையிலும் மரபுக்கவிதைகள் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலிய மரபார்ந்த பா வடிவங்களிலும் கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற



11th Advance Tamil - FINAL.indd 3    14-02-2019 17:27:52

வடிவங்களிலும் மரபுக் கவிதைகள் அமைகின்றன. இன்றளவும் தமிழில் மரபு மாறாத கவிதைகள் எழுதப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய வடிவ முன்னெடுப்புகள்

காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம்;தமிழ்மொழி வளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதியே தொல்காப்பியர்,

*விருந்தே தானும் புதுவது புனைந்த*
*யாப்பின் மேற்றே (தொல் – செய். 231)*

என்று, 'விருந்து' என்பதைப் 'புதுமை' என்னும் பொருளில் கூறியுள்ளார். தற்காலத்தின் சிறுகதை, நாவல், புதுக்கவிதை முதலியவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகக் கவிதையின் வடிவத்திலும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது.தனிமனித வாழ்வியல், சமூக வாழ்வியல் போன்றவை நவீனக்கவிதைகளின் பாடுபொருள்களாயின. புதுக்கவிதை, ஹைக்கூ, லிமெரிக், லிமரைக்கூ, சென்ரியூ, குக்கூ என நவீன வடிவங்களிலும் தமிழ்க்கவிதைகள் பயணிக்கத் தொடங்கின.

## புதுக்கவிதை

தொன்று தொட்டு வரும் மரபு வடிவத்தில், இன்றும் தமிழ்க் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன; எனினும் யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது. இஃது உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், சிலேடை, முரண், இருண்மை முதலான பல்வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டு, கவிஞனின் விரிசிந்தனைக்கேற்பப் புதுப்புது வடிவமெடுக்கிறது. யாப்பிலக்கணம் அறிந்தோருக்கு மட்டுமே என்றிருந்த கவிதையின் தன்மையை மாற்றி, பொதுவாசகர்களும் கவிதையைப் படிக்கவும் படைக்கவும் புதுக்கவிதை வாய்ப்பளிக்கிறது.

*சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது*
*சொற்புதிது சோதிமிக்க நவகவிதை.*

என்று பாரதியார் பாடுவதைப் புதுக்கவிதைக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம். புதுக்கவிதையில் கவிஞன் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத்த முடிகிறது. இதில் சமூக அவலங்கள், சமகால நிகழ்வுகள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் என அனைத்தும் பாடுபொருள்களாகின்றன.

## பாரதி தந்த புதுமை

பாரதியார்தாம் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது. என்றாலும் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக்கொண்ட அவர் உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். தம் காலத்தில் மட்டுமல்லாது இன்றும் அவர் தமிழ்க்கவிதையின் வலிமையான குரலாக ஒலிக்கின்றார். இவர் 'காட்சி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை, தமிழில் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதையாகும்.

*காட்சி*

*தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,*
*ஞாயிறு நன்று, திங்களும் நன்று.*
*வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.*
*மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.*
*கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.*

இவ்வாறு பாரதியின் முயற்சியால் தமிழில் கட்டற்ற கவிதை வடிவம் பிறந்தது.

## பாரதியின் காலம்

பாரதி வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர்



11th Advance Tamil - FINAL.indd 4 14-02-2019 17:27:52

ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடியகாலம்.பாரதிஅச்சூழலில்மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன. இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின. அவர் கவிதையைச் சமூகமாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார். நாட்டுப்புறச் சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டார். மக்களோடு நேரடியாகப் பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார். இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என மாற்றிக் கொண்டார்.

## பாரதிதாசன் காலம்

'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன். இவர், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், புவியை நடத்து; பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர். சந்த அமைப்புகளிலும் இசையிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர். மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரிய விருத்தங்களையும் பாடினார். சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை,

*ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்*
*உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்*
*ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி*
*ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ*

என்ற பாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## மணிக்கொடி காலம்

பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி இதழில் புதுக்கவிதைகளை எழுதினர். ந.பிச்சமூர்த்தி 'புதுக்கவிதையின் தந்தை' என அறியப்படுகிறார். இக்காலகட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.

## எழுத்து காலம்

புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சி.சு. செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது. 'பெட்டிக்கடை நாரணன்', 'விஞ்ஞானி' போன்ற கவிதைகளை ந. பிச்சமூர்த்தி எழுதினார்.

எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தது. புதுக்கவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே.துரைஸ்வாமி (நகுலன்), தருமுசிவராமு (பிரமிள்), சி.மணி, சுந்தரராமசாமி (பசுவய்யா), எஸ். வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அக்காலத்தில் தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் 'புதுக்குரல்கள்' என்னும் நூல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரதியைப் பின்பற்றியது. 24 கவிஞர்களால் எழுதப்பட்ட 63 கவிதைகளைக் கொண்டது.



11th Advance Tamil - FINAL.indd 5 14-02-2019 17:27:52

## கசடதபற காலம்

1970இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.

## வானம்பாடி காலம்

1971இல் கோவையிலிருந்து 'வானம்பாடி' இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா. காமராசன், மு. மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைகொண்டான், அக்னிபுத்திரன், சக்திக்கனல், சிதம்பரநாதன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்கக் கவிஞர்களாவர்.

இதே காலகட்டத்தில், அப்துல் ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புதுக்கவிதையின் உத்திகள்

## உவமை

தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும். பொருள் உணர்த்தும் முறைகளில் உவமை முதலிடம் பெறுகிறது.

*ஒரு உலோபி*
*பஞ்சத்தில் காக்கும்*
*பணப்பையைப் போல்*
*கோடை மேகம்*

–வைரமுத்து

கோடையின் வறட்சியில் வானமெங்கும் கருக்காத மேகங்கள் இருந்து பயனில்லை. கருணை இல்லாத கருமியின் பணப்பை போல என்று அழகாய்ப் பேசுகிறது இவ்வுவமை.

## உருவகம்

உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.

*வாழ்க்கையும் காவிரி*
*அதிலெங்கும் கிளிக்கூண்டு;*
*வார்த்தையே மணல்*
*ஓசையே ஜலம்*
*என் தீராத வேட்கையே*
*குவிக்கும் விரல்கள்*
*பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்*
*அழகென்னும் கிளியை அழைத்தேன்*
*ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்*
*அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்*

–ந .பிச்சமூர்த்தி

## படிமம்

உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது. முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகின்றது.

*விடிவு*
*பூமித் தோலில்*
*அழகுத் தேமல்*
*கதிர்கள் கமழ்ந்து*
*விரியும், பூ*
*இருளின் சிறகைத்*
*தின்னும் கிருமி*
*வெளிச்சச் சிறகில்*
*மிதக்கும் குருவி*

– பிரமிள்

## குறியீடு

ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை.



11th Advance Tamil - FINAL.indd 6 14-02-2019 17:27:52

*சமரச வேசமிட்ட குரங்கினிடம்*
*அப்பத்தைப் பறிகொடுத்த*
*பூனைகள் நாம்.*

*– அப்துல்ரகுமான்*

## அங்கதம்

அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.

*திண்ணை இருட்டில்*
*எவரோ கேட்டார்*
*தலையை*
*எங்கே வைப்பதாம்*
*என்று*
*எவனோ ஒருவன்*
*சொன்னான்*
*களவு போகாமல்*
*கையருகே வை !*

*–ஞானக்கூத்தன்*

## முரண்

ஒன்றுக்கு ஒன்று எதிரானவற்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். மரபுக் கவிதைகளில் இது முரண்தொடை எனக் கூறப்படும். மாறுபட்ட இரு பொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும்; நினைவிலும் நிற்கும்.

*என் கவிதை*
*கை குலுக்கும்*
*காலில் விழாது*
*உடுத்திக்கொள்ளும்*
*போர்த்திக்கொள்ளாது*

*– மு. மேத்தா*

## சிலேடை

சிலேடை என்பது ஒரு சொல் இருபொருள்பட வருவதாகும். பொதுவாகப் புதுக்கவிதை சொல்லலங்காரத்தை விரும்புவதில்லை. எனவே, சில கவிதைகளில்தான் சிலேடை உத்தியைக் காணமுடிகின்றது.

*என்னை*
*எவரெஸ்டாகப் பார்க்கும்*
*எந்த ஊரின் பார்வையில்*
*என் வீழ்ச்சி*
*மிகப் பெரிய வீழ்ச்சியே*
*எனினும்*
*இது இயல்பானது*
*தடுக்க முடியாதது*
*. . . என் வீழ்ச்சி*
*நீர்வீழ்ச்சியே*

என்னும் மீராவின் கவிதையில் 'வீழ்ச்சி' என்னும் சொல் 'வீழ்தல்' என்னும் பொருளிலும், 'நீர்வீழ்ச்சி' என்பது 'அருவி' என்னும் பொருளிலும் சிலேடைகளாக வந்துள்ளன.

## இருண்மை

சொல்லுக்கும் அஃது உணர்த்தும் பொருளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றிருக்கும். படிப்பவர்தம் அறிவுக்கும் உணர்வுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அது வெவ்வேறு பொருளைத் தரும்.

*நான் ஒரு உடும்பு*
*ஒரு கொக்கு*
*ஒரு ஒன்றுமேயில்லை*

*– நகுலன்*

இவ்வாறு புதுக்கவிதைகள் பல்வேறு உத்திகளைக் கொண்டு அமைகின்றன.

# புதுக்கவிதையின் உள்ளடக்கம்

## இயற்கை மரபு

தமிழ்க்கவிதை சங்ககாலம் முதலே இயற்கையோடு இணைந்த வாழ்வியலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இயற்கையின் அழகை உருவகப்படுத்தும் தமிழ்க்கவிதை மரபு புதுக்கவிதையிலும் தொடர்கிறது.

கவிஞர் சிற்பி, தம் கிராமத்து நதியினைப் பற்றிப் பாடும்போது,



11th Advance Tamil - FINAL.indd 7 14-02-2019 17:27:52

*இது*
*நான் தவழ்ந்த கோரைப்பாய்*
*முகம் பார்த்த கண்ணாடி*
*என் காதலின் வீணை*
*நினைவுகளைப் பொதிந்து வைத்த*
*வெள்ளித்தாள்.*

என்று அழகுபட எழுதுகிறார். கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் நதியை அவர் உருவகப்படுத்தியுள்ளார்.

## மனிதநேயம்

தமிழ்க்கவிதைகள் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் தருபவை.

*ஆட்டுக்குட்டியை*
*மடியில் போட்டு*
*ஈத்திக் கொண்டிருக்கும்*
*அம்மாவும்*
*பசுவிற்கு*
*உண்ணி பிடுங்கி நிற்கும்*
*அப்பாவும்*
*படித்ததில்லை...*
*உயிர்களிடத்தில் அன்பு வேணும்*

*– இளம்பிறை*

## அழகியல்

கவிதையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை. ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் தரத்தினை மதிப்பிட அதன் அழகியல் பதிவுகளே அடிப்படையாகும்.

கல்யாண்ஜியின் கடிதப்பெட்டியிலோ ஒரு அழகிய கவிதையே கடிதமாக வந்து கிடக்கிறது.

*தினசரி வழக்கமாகிவிட்டது*
*தபால் பெட்டியைத்*
*திறந்து பார்த்துவிட்டு*
*வீட்டுக்குள் நுழைவது.*
*இரண்டு நாட்களாகவே*
*எந்தக் கடிதமும் இல்லாத*
*ஏமாற்றம்*
*இன்று எப்படியோ*
*என்று பார்க்கையில்*
*அசைவற்று இருந்தது*
*ஒரு சின்னஞ் சிறு*
*இறகு மட்டும்*
*எந்தப் பறவை*
*எழுதியிருக்கும்*
*இந்தக் கடிதத்தை.*



ஓர் ஓவிய வீட்டின் தனிமை அனுபவத்தை அழகுபடப்பேசுகிறது இக்கவிதை.

*பட வீட்டின் தனிமை*

*சுவரில் தொங்கும்*
*வரைபட மர நிழலும்*
*ஒற்றைக் குடிசையும்*
*கொஞ்சம் பூக்களும்*
*ஒரு வானமும்.*

*கண்கள் பூக்கள் மீதிருக்க*
*மனம் தேடிப் போகிறது*
*வரைபட வீட்டின்*
*தனிமையை.*

*–சல்மா*



11th Advance Tamil - FINAL.indd 8 14-02-2019 17:27:52

## நம்பிக்கைத் தளிர்கள்

வெற்றிக்கு அடித்தளமாக அமைவது தன்னம்பிக்கையே. ஒவ்வோர் இலையுதிர்கால வீழ்ச்சிக்குப் பிறகும் புதியதளிர்களோடு வரும் வசந்தகாலம் போல ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் வெற்றியின் தளிர்கள் தழைக்கும் என்ற நம்பிக்கையைப் பேசுகிறது இக்கவிதை.

*புதுத் தளிர்களால்*
*கொண்டாடக் காத்திருக்கிறது தரு*
*ஒரு பாடலுடன் வரவிருக்கிறது குயில்*
*உடன் தளர்ந்து விழும் சருகுகளைத் தொடர்ந்து*
*ஒரு பழுப்பாடை தரித்து*
*என் பயணமும்*
*இலையுதிர் காலம் எனினும்*
*சருகாவதில்லை வேர்கள்*

*– இன்குலாப்*

## பெண்ணுரிமை

பெண்களுக்கு வழங்கும் மதிப்பில்தான் ஒரு நாகரிக சமுதாயத்திற்கான அளவுகோல் உள்ளது. தமிழ்க்கவிதைகள் பெண்விடுதலைக்குத் தொடர்ந்து குரல் கொடுத்துவருகின்றன. தமிழ்க் கவிதைப் போக்கில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்று பெண்களின் பங்களிப்பு. பெண்கள் சந்திக்கும் பல்வேறு அனுபவங்கள் கவிதைகளாகின்றன.

*நாளும் கிழமையும்*
*நலிந்தோர்க்கு இல்லை*
*ஞாயிற்றுக்கிழமையும்*
*பெண்களுக்கில்லை*

*– கந்தர்வன்*

*ஏடுகளில்*
*முன்பக்கத்தில்*
*அட்டையில்!*
*வீடுகளில்*
*பின்பக்கத்தில்*
*அடுப்பங்கரையில்!*

*– காசி ஆனந்தன்*

*யானைக் கதை*

*முன்பு ஒருநாள்*
*தன் அம்மா சொன்ன*
*கதைக்குள் இருந்த யானை ஒன்றை*
*என் அம்மா எனக்குப் பரிசாகக்*
*கொடுத்தாள்*
*வெகுகாலம் கழித்து வெயில் தாளாமல்*
*யானையுடன் கடலுக்குச் சென்றேன்*
*மலைமலையாய் அலையெழுப்பி*
*நீருக்குள் புதைத்துப் புரட்டி*
*கிண்டிக் கிளறி வெளியே என்னைத்*
*தூக்கி எறிந்தது கடல்*
*கரைந்து மீந்த பாதித் தும்பிக்கையுடன்*
*கடலும் வானமும் ஒன்றாகக் கலந்து*
*பிளிறியது*
*சோகத்துடன் திரும்பினேன்*
*ஊரே கூடி என்னை வேடிக்கைப்*
*பொருளெனப் பார்க்க*
*குழம்பிப் பின் திரும்பினேன். . .*
*தெருவெல்லாம்*
*அலையலையாய் என்பின்னே*
*தொடர்ந்துவர*
*கடலில் கரைந்த ஒற்றை யானைக்கு*
*ஓராயிரம் தும்பிக்கைகளென*
*என் மகள் ஊருக்கெல்லாம்*
*ஒரு கதை சொல்லிச் செல்கிறாள்.*

*– மாலதி மைத்ரி*

## விளிம்பு நிலை மாந்தர்

எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழில் விளிம்புநிலை மாந்தருக்கான கவிதைகள் எழுதப்பட்டன. இக்கவிதைகள் விடுதலையை, சுயமரியாதையை மீட்டெடுப்பதற்கான குரலாக வெளிப்படுகின்றன.

தேசமெங்கும் இரட்டை வாழிடங்களில் உள்ள விளிம்பு நிலை மாந்தரின் வலிகளைப் பதிவு செய்கிறது இக்கவிதை ...

*எட்டாத தொலைவில் நின்று*
*பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்*
*உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி*
*காலணிகளற்ற பாதங்களை நனைக்க*
*என் கிராமத்தின் ஓவியம்*
*தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது*
*ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்*

*–சுகிர்தராணி*



11th Advance Tamil - FINAL.indd 9 14-02-2019 17:27:52

## திருநங்கையர்

திருநங்கையரின் கோணத்திலிருந்து பேசும் இக்கவிதைகள் அழகான படிமங்களோடு வெளிப்படுகின்றன. அவர்களை ஏற்றுக்கொண்டு, அரவணைத்துச் செல்லவேண்டுமென்கிற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகின்றன.

*சந்திப்பிழை*

*காலமழைத் தூறலிலே*
*களையாய்ப் பிறப்பெடுத்தோம்*
*தாய்ப்பாலின் சரித்திரத்தில்*
*சதிராடும் புதிரானோம்*
*விதை வளர்த்த முள்ளானோம்*
*விளக்கின் இருளானோம்*
*சந்திப்பிழை போன்ற*
*சந்ததிப்பிழை நாங்கள்*
*காலத்தின் பேரேட்டைக்*
*கடவுள் திருத்தட்டும்*

*– நா. காமராசன்*

*உனக்குத் தெரிவதில்லை*

*சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை*
*சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை*
*சில சமயங்களில் நீ உணர்வதில்லை*
*பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை*
*தெரிந்தும் உணர்ந்தும்*
*கடந்து போகிறாய்*
*என் அந்தரங்கத்தை மிதித்தபடி...*
*யார் எவர் என்று தெரியாமல்*
*தொடர்ந்து மிதிபட்டே வருகிறோம்*
*நானும் இருண்ட என் எதிர்காலமும்!!*

*– லிவிங் ஸ்மைல் வித்யா*

## புதிய வடிவங்கள்

உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழ்ச்சூழலுக்கேற்ற உள்ளடக்கங்களுடன் ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ ஆகிய வடிவங்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன.

## துளிப்பா – ஹைக்கூ

16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார். ஹைக்கூ கவிதை மூன்று வரிகளால் ஆனது. முதல் இரண்டு வரிகளில் கூறப்படும் கருத்தை மூன்றாவதுவரி விடுவிக்கும். மிக நுணுக்கமான ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும் ஹைக்கூ, கடைசி வரியில் படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்திவிடும்.

*தந்தை தந்த*
*தாய்ப்பால்*
*முப்பால்*

*அகதி முகாம்*
*மழையில் வருகிறது*
*மண்வாசனை*

*பள்ளிக்குப் போகாத சிறுமி*
*செல்லமாய்க் குட்டும்*
*ஆலங்கட்டி மழை*

*– அறிவுமதி*

*அடிவிழ அடிவிழ*
*அதிரும் பறை*
*தலைமுறைக் கோபம்*

*– மித்ரா*

*குட்டிமீன்*
*கடித்துச் சென்றது*
*தூண்டில்காரன் காலை*

*கோடை மரம்*
*கொஞ்சம் இலை*
*நிறைய வானம்*

*– வைகறை*

*ஆயிரம் முட்கள் இருந்தும்*
*ஒரு தூண்டில் முள்ளிடம்*
*தோற்றுவிடுகிறது மீன்*

*மிதித்து விடாதே*
*அழகாயிருக்கிறது*
*குழந்தையின் நிழல்*

*நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்*
*விழித்ததும் வெட்ட வேண்டும்*
*இதே மரத்தை*

*– பனிமலர் என்னும் கவிதைத்தொகுப்பிலிருந்து*



11th Advance Tamil - FINAL.indd 10 14-02-2019 17:27:52

## நகைப்பா – சென்ரியூ

சென்ரியூ கவிதை என்பது ஹைக்கூ கவிதையின் பரிணாமமாகும். ஹைக்கூவின் கட்டுப்பாடுகளை உதறிவிட்டு, அது சுதந்திரமாக இயங்குகிறது. ஹைக்கூவின் தத்துவமும் கருத்தாழமும் அதில் குறைவு. அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் குறும்புத்தனமும் நகைச்சுவையும் கலந்து சென்ரியூ எழுதப்படுகிறது.

*அடடே!*
*இந்தப்பழம் இனிக்கும்*
*ஏணியுடன் அதே நரி*

– தமிழன்பன்

*மதில்மேல் பூனை*
*இரண்டு பக்கமும்*
*நாய்கள்*

–அமுதபாரதி

## இயைபுக் குறும்பா – லிமெரிக்

லிமெரிக் கவிதை ஐந்து அடிகளைக் கொண்டிருக்கும். முதல், இரண்டாம் மற்றும் கடைசி அடிகளில் உள்ள கடைசிச்சொற்கள் தம்முள் ஒலி ஒற்றுமை கொண்டு, மழலையர் பாடல்கள் போல் இருக்கும். இவை நகைச்சுவை, எள்ளல் ஆகிய கூறுகளைக் கொண்டமைபவை. ஈழத்துக் கவிஞர் மகாகவியின் லிமெரிக் கவிதையொன்று....

*முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்.*
*முன்னாலே வந்து நின்றான் காலன்*
*சத்தமின்றி, வந்தவனின்*
*கைத் தலத்திற் பத்து முத்தைப்*
*பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்*

இக்கவிதையில் இன்றைய சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் ஊழல், நையாண்டி செய்யப்படுகிறது.

## இயைபுத்துளிப்பா – லிமெரைக்கூ

ஹைக்கூ கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது லிமெரைக்கூ. இது வாழ்வியலை நகைச்சுவையோடு வெளிப்படுத்துவது. தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் ஈரோடு தமிழன்பன். அவரது லிமெரைக்கூ கவிதைகளுள் சில...

*வானம் கூட்டுள் வருமா?*
*பறக்க மறந்து ஒடுங்கி இருந்தால்*
*சிறகு பெருமை தருமா?*

*குழந்தை வளர்ந்த தொட்டில்*
*கிழிந்து கந்தல் ஆன பின்னும்*
*பாடும் தாய்மை மெட்டில்*

## மீராவின் குறும்பாக்கள்

ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட கவிஞர் மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்ட அக்கவிதைகள், 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

*ஆயிரம் ஈக்கள்*
*மொய்க்கும் ஆசையில்*
*வானத் தட்டில்*
*இராத்திரிக் கிழவி*
*சுட்டு வைத்த*
*ஒற்றைத் தோசையில்*

## மொழிபெயர்ப்புக்கவிதை

மொழிபெயர்ப்பின் வாயிலாக நம்மை வந்தடையும் கவிதைகளை வாசிக்கும்போது, நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள், காட்சிப் பதிவுகள், கருத்தாக்கங்கள், கேள்விகள், அதிர்வுகள் ஆகியன புதிய தேடல்களைத் தரக்கூடியவை. அவ்வகையில் அமைந்த ஒரு மராத்தியக் கவிதையின் தமிழ்மொழிபெயர்ப்பு...

*என் பசி*

*ஒத்துக்கொள்கிறேன்*
*நான் உன் அடிமை என்பதை.*
*உணர்ந்து கொண்டேன்*
*இழந்துபோன*
*என் உரிமைகளை.*



11th Advance Tamil - FINAL.indd 11 14-02-2019 17:27:52

*நானே வலிய வந்து*
*ஏற்றுக்கொண்டு விட்டேன்*
*–என் சுதந்திரம்*
*பறிக்கப்பட்டதை–*

*என்னைக் கட்டிப்போட்டிருக்கும்*
*சங்கிலியின் மறுமுனை*
*உன் வசம்.*
*நீ ஆட்டுகிறாய்*

*என்னை ஆட்டுவிக்கிறாய்*
*காட்சிப்படுத்துகிறாய்*
*என்னைக்*
*காட்சிப் பொருளாக்கும்*
*கண்காட்சிகளை*
*என் சம்மதத்துடனேயே*
*அரங்கேற்றுகிறாய்*

*என்னை விடுவிக்க*
*என் மீது கொண்ட*
*அபரிதமான உன் காதலால்கூட*
*என் கட்டுகளை அவிழ்க்கும்*
*நாட்களைப் பற்றிப் பேசாதே.*

*கெட்டுப்போன*
*எச்சில் பருக்கையை*
*என் தட்டில் பரிமாற*
*காத்திருக்கும்*
*ராட்சதக் கைகள்*

*என்ன செய்யட்டும்*
*இருந்துவிட்டுப் போகிறேன்*
*உனக்கு மட்டுமேயான*
*அடிமையாக.*

*களைத்துப் போய்விட்டேன்.*
*கண்டவர்கள்*
*கால்களை எல்லாம்*
*நக்கி நக்கி*

*வறண்டு போய்விட்டது*
*என் நாக்குகள்.*
*அதில் பிறக்கும்*
*என் வார்த்தைகள்*
*வலிமை குன்றிவிட்டன*
*எழுந்து நிற்க முடியாமல்*
*சரிந்து விழுகின்றன.*
*பற்களுடன் உரசியபின்னும்*
*என் நாக்குகளுக்குக்*
*கிடைக்கவில்லை*
*வார்த்தைகளின்*
*ஒலிச்சுவடு.*

*என் உதடுகளைப்*
*பற்றிக்கொள்ள துடிக்கும்*
*வார்த்தைகள்*
*எல்லா இடங்களிலும்*
*பலகீனமாய் எதிரொலிக்கின்றன.*

*எதுவும் மிச்சமில்லை*
*என்வசம் இப்போது.*
*கண்களில்*
*தென்படும் கடைசி*
*எதிர்பார்ப்பைத்தவிர*

*உன் தட்டில்*
*எஞ்சி இருக்கும்*
*கடைசிப் பருக்கையைத்*
*தருவாயா*
*என் பசித்தீர்க்க?*

*– மராத்தியில் கவிதா மகாஜன்*
*– தமிழில் புதியமாதவி*

இவ்வாறாகத் தமிழ்க்கவிதை தன் ஆதி மரபிலிருந்து இன்றைய நவீனம்வரை உன்னதமான வெளிப்பாட்டுடன் வளர்ந்து வருகின்றது.

தமிழ் வாழ்வின் பண்பாட்டுத் தளத்தில் கிளைத்து விரியும் தமிழ்க்கவிதைகள், உலகளாவிய கவனத்தையும் சிறப்பையும் பெற்றுவருகின்றன.



11th Advance Tamil - FINAL.indd 12 14-02-2019 17:27:53

# நாட்டுப்புறப்பாடல்கள்

சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியே நாட்டுப்புறப் பாடல்கள். இவை, நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள், உழைக்கின்றபோது களைப்புத் தோன்றாமல் இருப்பதற்காகவும் தம் வாழ்வில் பெறும் அனுபவங்களை வெளிப்படுத்துவதற்காகவும் பாடப்படுகின்றன. இப்பாடல்கள், மக்களது உணர்வுகளையும் மனப்பதிவுகளையும் எத்தகைய புனைவுகளுமின்றி இயல்பாகப் பதிவு செய்கின்றன.

இப்பாடல்கள் காலத்தால் முந்தியவை என்றாலும் இன்றும் நம் வாழ்க்கையில் மண்ணின் மணம் மாறாமல் இசைத் தன்மையோடு ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நாடோடிப்பாடல், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், ஏட்டிலெழுதாக் கவிதை, மக்கள்பாடல், பரம்பரைப்பாடல், நாட்டார்பாடல் என்று பல்வேறு பெயர்களில் மக்கள் அழைக்கின்றனர்.



மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்த நாட்டுப்புறப்பாடல்கள் தாலாட்டுப்பாடலாக, தெம்மாங்குப்பாடலாக, விளையாட்டுப்பாடலாக, கும்மிப்பாடலாக, ஒப்பாரிப்பாடலாக, தொழிற் பாடலாக, வழிபாட்டுப்பாடலாகப் பல்வேறு வடிவங்களில் எட்டுத்திக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வில்லிசை, பொம்மலாட்டம், தெருக்கூத்து, கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம் ஆகிய நாட்டுப்புறக்கலை வடிவங்களில் நாட்டுப்புறப்பாடல் தன் ஆற்றலை வெளிக்காட்டுகிறது.

### *விறகொடிக்கும் பெண்*

*வேகாத வெயிலுக்குள்ளே – ஏ தில்லலோ லேலோ*
*விறகொடிக்கப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ*
*காலுனக்குப் பொசுக்கலையோ – ஏ தில்லலோ லேலோ*
*கத்தாழ முள்ளு குத்தலையோ – ஏ தில்லலோ லேலோ*
*காலு பொசுக்கினாலும் – ஏ தில்லலோ லேலோ*
*கத்தாழ முள்ளு குத்தினாலும் – ஏ தில்லலோ லேலோ*
*காலக் கொடுமையாலே – ஏ தில்லலோ லேலோ*
*கஷ்டப்படக் காலமாச்சு – ஏ தில்லலோ லேலோ*
*கஷ்டப்பட்டுப் பாடுபட்டு – ஏ தில்லலோ லேலோ*
*கழுத்தொடிய சுமக்கும் பொண்ணே – ஏ தில்லலோ லேலோ*
*எங்கே போய் விறகொடிச்சி – ஏ தில்லலோ லேலோ*
*என்னசெய்யப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ*
*காட்டுக்குள்ளே விறகொடித்து – ஏ தில்லலோ லேலோ*
*வீட்டுக்கத சொமந்து வந்து – ஏ தில்லலோ லேலோ*
*கால்ரூவாய்க்கு வெறகு வித்து – ஏ தில்லலோ லேலோ*
*கஞ்சிகண்டு குடிக்கணுமே – ஏ தில்லலோ லேலோ*





11th Advance Tamil - FINAL.indd 13 14-02-2019 17:27:53

நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளத்து உணர்வுகளை வடிகட்டாமல் அப்படியே கொட்டும் பாடல்கள். அதனால் அவற்றில் இயல்பான சொல்வளமும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பும் நிறைந்திருக்கும். அத்தகு பாடல்களுள் ஒன்று இது.



*தாயை இழந்த மகள் பாடுவது*

*பூமியிலே விட்டாலே – என்*
*பொற்பாதம் நோகுமென்பாய்.*
*தரையிலே விட்டாலே – என்*
*தங்கக்கால் நோகுமென்பாய்.*

*மார்மேலே தொட்டி கட்டி – எனக்கு*
*மடிமேல் நடை பழக்கி,*
*தோள்மேலே தொட்டிகட்டி – எனக்குத்*
*துடைமேல் நடை பழக்கி*

*நெய் ஊட்டி வளர்த்த – உன்*
*நேசத்தை நான் மறவேன்*
*பால் ஊட்டி வளர்த்த –உன்*
*பாசத்தை நான் மறவேன்*

*கள்ள நிழலாச்சே – இனி எனக்குக்*
*கண்டவர்கள் தாயாச்சே*
*வேலி நிழலாச்சே – இனி எனக்கு*
*வேண்டியவர்கள் தாயாச்சே*

*குடத்தோடே தண்ணீர் – எனக்குக்*
*குளிரத்தான் வளர்த்தாலும்*
*தாய்வளர்த்த தண்ணீர்போல்*
*தாகந் தணியா தெனை.*





**தெரியுமா?**

**சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற கவிதை நூல்கள்**

1968 – வெள்ளைப் பறவை – அ. சீனிவாச ராகவன்

1978 – புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – வல்லிக்கண்ணன்

1982 – மணிக்கொடி காலம் – பி. எஸ். ராமையா

1999 – ஆலாபனை – அப்துல் ரகுமான்

2002 – ஒரு கிராமத்து நதி – சிற்பி. பாலசுப்பிரமணியம்

2004 – வணக்கம் வள்ளுவ! – ஈரோடு தமிழன்பன்

2006 – ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு. மேத்தா

2009 – கையொப்பம் – புவியரசு

2017 – காந்தள் நாட்கள் – இன்குலாப்



11th Advance Tamil - FINAL.indd 14 14-02-2019 17:27:53

# தனிப்பாடல்கள்

தமிழில் தனிப்பாடல்களின் வரலாறு தனித்துவமானது. சங்ககாலப் பாடல்களைத் திரட்டித் தொகுத்தது போல இன்று வரையிலும் புதிய தடங்களில் பல திரட்டுகள் வெளிவருகின்றன. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல் என்கிறோம். புலவர்கள் தம் உள்ளக்கருத்தை எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் விருப்பம் போல எழுதிய பாடல்கள் இவை. இவற்றைத் தமிழறிஞர்களும் சுவைஞர்களும் பெரிதும் முயன்று, தேடித் 'தனிப்பாடல்கள்' என்ற தலைப்பில் தொகுத்திருக்கிறார்கள். இப்பாடல்களில் பலவித உணர்ச்சிகள், ஓசை விளையாட்டு, சொல் விளையாட்டு, விடுகதை என அத்துணை சுவைகளும், நயங்களும் காணக்கிடக்கின்றன.

### தனிப்பாடலில் சொல்விளையாட்டு

***முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்***
***முன்னெழுத் தில்லாவிட்டால் பெண்ணே யாகும்***
***பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம்***
***பிற்பாதியுடன் முன்னெழுத்து இருந்தால் மேகம்***
***சொற்பாகக் கடை தலைசின் மிருகத்தீனி***
***தொடர்இரண்டாம் எழுத்து மாதத்தில் ஒன்றாம்***
***பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா***
***புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே***

***– அழகிய சொக்கநாதர்***

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பார் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றைப் பாடியுள்ளார்.



### பொருள்

முத்துசாமி வள்ளலே! இக்கதையின் உட்பொருளை ஆராய்ந்து சொல்லுக. ஒரு சொல்லின் முதற்பாதியை நீக்கிவிட்டால் இருப்பது 'அல்' என்னும் சொல். அதற்கு இருள் என்பது பொருள். அச்சொல்லின் முதலெழுத்தாகிய 'பு' என்னும் எழுத்தை நீக்கிவிட்டால் 'தையல்' ஆகும். அச்சொல்லுக்குப் பெண் என்பது பொருள். அச்சொல்லின் பிற்பாதியை நீக்கிவிட்டால், 'புதை' என்னும் கட்டளையிடும் சொல்லாகும். அச்சொல்லின் பிற்பாதி எழுத்துடன் முன்னெழுத்தாகிய 'பு' சேர்த்தால் மேகம் என்னும் பொருள்படும் 'புயல்' ஆகும். அந்தச் சொல்லின் முதல் எழுத்தாகிய 'பு' வையும் கடை எழுத்தாகிய 'ல்' என்பதையும் சேர்த்தால் விலங்குகள் தின்னும் 'புல்' ஆகும். அச்சொல்லின் இரண்டாம் எழுத்தாகிய 'தை' மாதத்தில் ஒன்றாகும். 'புதையல்' என்ற சொல்லைப் பலவாறு பிரித்துப் பல அரிய பொருள் விளங்குமாறு சொல் விளையாட்டில் ஈடுபடும் புலவர் தமிழ்ச்சொல் வளத்தின் மாண்பினைப் புலப்படுத்துகிறார்.



11th Advance Tamil - FINAL.indd 15 14-02-2019 17:27:53

### தனிப்பாடலில் விடுகதை

*பத்துக்கால் மூன்றுதலை பார்க்கும்கண் ஆறுமுகம்*
*இத்தரையில் ஆறுவாய் ஈரிரண்டாம் – இத்தனையும்*
*ஓரிடத்தில் கண்டேன் உகந்தேன் களிகூர்ந்தேன்*
*பாரிடத்தில் கண்டே பகர்*

*– சுந்தர கவிராயர்*

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் சுந்தரகவிராயர். உழவுத்தொழிலின் உயர்வை நன்குணர்ந்தவர். எட்டையபுரம் அருணாசலத்துரை, தையூர் முத்து முதலானோர் இப்புலவரை ஆதரித்துள்ளனர்.

#### பொருள்

இவ்வுலகில் பத்துக்காலும் மூன்று தலையும் பார்க்கும் கண் ஆறும் முகம் ஆறும் வாய் நான்கும் ஆகிய இத்தனையும் உடைய ஒன்றை ஓரிடத்திலேயே பார்த்தேன்; அதன்மீது விருப்பம் கொண்டேன்; மகிழ்ச்சி அடைந்தேன். இவ்வுலகில் இந்தப் புதுமையைக் கண்டு என்னவென்று கூறுவாயாக.

#### நயம்

இரு காளையை ஏரில் பூட்டி ஓட்டும்போது, இரு காளையின் கால் எட்டும், ஓட்டும்



மனிதன் கால் இரண்டும் ஆகப் பத்துக் காலும், காளையின் தலை இரண்டும், மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலையும் இருக்கும்.

இரு காளையின் கண்கள் நான்குடன் ஏர் ஓட்டுபவன் முகத்திலுள்ள இரு கண்களும் சேர்த்து ஆறு ஆவன காண்க. காளை, மனிதன் முகங்களோடு கொழுமுகம் மூன்றும் சேர்த்து முகம் ஆறும், காளைகள், மனிதன் ஆகியோரின் மூன்று வாயோடு நாழிவாய் ஒன்றும் சேர்த்து வாய் நான்காவதும் காண்க.

(உழவுத்தொழிலின் மேன்மை)

## சித்தர் பாடல்கள்

'சித்து' என்ற சொல் அறிவு என்னும் பொருளைக் குறிக்கும். சித்தர் என்னும் சொல் அறிவுடையோர் என்ற பொருளைத் தரும். சித்தர் இலக்கியம் சடங்குகள், சம்பிரதாயங்கள், சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிற்கு எதிரான விமர்சனத்தை முன்வைத்தது. அதே சமயம் மெய்யியல் அனுபவங்களையும் முன்வைத்தவர்கள் சித்தர்கள். உருவ வழிபாடுகளை எதிர்த்துள்ளனர். சாதி, சமய ஏற்றத்தாழ்வையும் எதிர்த்துள்ளனர். வானவியல், யோகாசனம், வர்மம், பஞ்சபட்சி சாஸ்திரம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தனர். பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி சித்தர்களின் கொடையாகும். சித்தர்கள் தமது கண்டுபிடிப்புகளையும் ஆற்றல்களையும் மக்களின் நன்மைக்கே பெரும்பாலும் பயன்படுத்தினர். இவர்கள் தம்பாடல்களின்வழி சமூகத்தில் நிலவிய மூடப்பழக்கவழக்கங்களை எதிர்த்தவர்கள். சித்தர்கள் பெரிதும் மனித வாழ்வின் நிலையற்ற தன்மையைக் கூறி, மனத்தையும் உடலையும் யோகப்பயிற்சியால் ஒருமுகப்படுத்தலாம் என்னும் தத்துவத்தைத் தந்துள்ளனர். சித்தர்கள், மருத்துவத்தில் 'சித்தமருத்துவம்'



11th Advance Tamil - FINAL.indd 16 14-02-2019 17:27:53

என்ற தனிப்பிரிவு தோன்றும்படி பல்வேறு நோய்களையும் அவை தீர்க்கும் மருந்துகளையும் கண்டறிந்தவர்கள்.

## இடைக்காட்டுச் சித்தர் பாடல்

*கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை*
*விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே!*
*பாலிற் சுவைபோலும் பழத்தில் மது போலும்*
*நூலிற் பொருள்போலும் நுண்பொருளைப் போற்றீரே!*
*எள்ளில் தைலம்போல் எங்கும் நிறைபொருளை*
*உள்ளில் துதித்தே உணர்வடைந்து போற்றீரே!*

*–இடைக்காட்டுச் சித்தர்*

### ஆசிரியர் குறிப்பு

இடைக்காடு என்ற ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். இவர் போகர் என்ற சித்தரின் சீடர். 'இடைக்காடர் ஞான சூத்திரம் எழுபது' என்பது இவருடைய நூல். மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் இவர் பாடியுள்ளார்.

### பொருள்

நம் கண்ணில் இருக்கும் கருமணி போன்றவனை; நாம் கருதுகின்ற மாபெரும் ஒளியைப் போன்றவனை; விண்ணில் விளங்கும் சுடர் போன்றவனை; திருவிளக்கின் ஒளியாய்த் திகழ்பவனை எந்நாளும் போற்றுவீராக. பாலில் மறைந்துள்ள சுவை போலவும் பழத்தில் மறைந்துள்ள இனிமை போலவும் நூல்களில் மறைந்துள்ள நுட்பமான கருத்துகள் போலவும் உலகப் பொருள்களில் எல்லாவற்றிலும் நுட்பமாய் மறைந்திருக்கும் இறைவனைப் போற்றுவீராக. எள்ளின் உள்ளிருக்கும் எண்ணெய்யைப்போல எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை உள்ளத்தில் இருத்தி, உணர்வுடன் போற்றுவீராக.



## குதம்பைச் சித்தர் பாடல்

*வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்*
*பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்!*
*பட்டயம் ஏதுக்கடி.*
*மெய்ப்பொருள் கண்டு விளங்கும்மெய்ஞ் ஞானிக்குக்*
*கற்பங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!*
*கற்பங்கள் ஏதுக்கடி.*
*முத்தமிழ் கற்று முயங்கும்மெய்ஞ் ஞானிக்குச்*
*சத்தங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!*
*சத்தங்கள் ஏதுக்கடி.*

*– குதம்பைச் சித்தர்*

### ஆசிரியர் குறிப்பு

இவருடைய பாடல்களில் 'குதம்பாய்' என்று மகடூஉ முன்னிலை வருவதால், இவர் 'குதம்பைச் சித்தர்' என்று அழைக்கப்பட்டார். இவர் பாடல்களில் சித்தர்களின் இயல்புகள் பேசப்படுகின்றன.

### பொருள்

குதம்பாய்! உலகம் நிலையற்றது. வெட்டவெளியாகிய உலக இயக்கமே நிலையானது என்ற கொள்கையுடைய சான்றாண்மை உடையோருக்கு அதற்கான உரிமை ஆவணம் எதற்கு? மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த மெய்ஞ்ஞானியர்க்குப் புறஉடலுக்கு வலிமை தரும் காயகற்ப மருந்துகள் எதற்கு? மூன்று தமிழையும் கற்று மெய்ப்பொருளோடு இணைந்துவிட்ட மெய்ஞ்ஞானிகளாகிய சித்தர்களுக்குச் சத்தமிட்டுப் பாடும் வெற்றுக்கூப்பாடுகள் எதற்கு?

# சிற்றிலக்கியங்கள்

## சிற்றிலக்கிய வரையறை

பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனையும் உணர்த்துவதற்காக எழுந்தன. இவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்து வரும் தன்மையில் அமைந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள். சிற்றிலக்கியங்கள் தொல்காப்பியம் கூறும் 'விருந்து' என்னும் வனப்பினுள் அடங்கும். சிற்றிலக்கியம் 96 வகையின என்பர். தூது , உலா, பரணி, குறவஞ்சி, பள்ளு , அந்தாதி, கோவை, கலம்பகம் , பிள்ளைத்தமிழ், சதகம் போன்றன சிற்றிலக்கிய வகைகளுள் சில. சிற்றிலக்கியங்களின் காலத்தைக் குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கிவிட இயலாது. சங்கம்முதல் இன்றுவரை பெரிதும் சிறிதுமாக இவ்வகை இலக்கியம் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. இவை வட்டாரச் சார்புடையவை. பல்லவர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் செழித்தோங்கியதைப் போல, நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் செழித்தன.

## ஆசியா உம்மா பாடல்கள்

### சூஃபித்துவம்

மெய்ஞ்ஞானத்தேடலையும்மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம். அதன் தொடக்கப் புள்ளியாக அலி இபின் அபி தாலிஃப் கருதப்படுகிறார். சூஃபித்துவத்தின் ஆணிவேர், இசுலாத்தின் அடிப்படையான மனிதநேயத்திலும் ஆன்மீகத்திலும் வேரூன்றியுள்ளது. தத்துவக்கோட்பாடுகளையும் அறிவு சார்ந்த தருக்கங்களையும் தாண்டி, ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் வலியுறுத்தும் அகத்தரிசனமே சூஃபித்துவத்தின் அடிப்படை எனலாம். தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும்.

## ஆசியா உம்மாவின் பேரானந்தக் கண்ணிகள்

*எத்தனையோ ஓதிடினும் எவ்விதங்கள் கற்றாலும்*
*சித்தந் தெளியார்க்கு சித்தி ஜெயமோ பேரானந்தமே!*

*பணமும் சனமும் பண்பான ஆஸ்திகளும்*
*ஜனங்களை விட்டேகையிலே சதமோ பேரானந்தமே!*

*ஆண்என்பதும் பெண்என்பதும் ஆதியன்றி வேறொன்றில்லை*
*தான்என்பதை யறிய தவமருள் பேரானந்தமே!*

*மூலப்பொருளை நன்றாய் மவுனமுடனே யறிந்தால்*
*வாலைப்பிராயம் வந்து வாய்க்குமே பேரானந்தமே!*

*– செய்யிது ஆசியா உம்மா*

### ஆசிரியர் பற்றி

சீதக்காதி மரபு வந்த ஹபீபு முகம்மது மரைக்காயருக்கும் ஹபீபு உம்மாவுக்கும் மகளாகப் பிறந்தவர் செய்யிது ஆசியா உம்மா. இவர் கல்வத்து நாயகத்தின் சீடர். இவர் மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிகா இரத்தினம் ஆகிய பாடல்களை அரபுத்தமிழ் வடிவத்தில் இயற்றினார். இவை 'மெய்ஞ்ஞானப் பாடல்' எனும் தொகுப்புநூலில் இடம்பெற்றுள்ளன.





11th Advance Tamil - FINAL.indd 18 14-02-2019 17:27:53

### தெளிவுரை

- எத்தனை வேதங்களை எம்முறையில் கற்றாலும் அறிவில் தெளிவு அடையாதவர் தெளிவு அடைவதே பேரின்ப நிலையாகும்.

- சேர்த்த பொருட்செல்வங்களும் இந்த உலகில் சேர்ந்த உறவினர்களும் நேர்மையாகச் சேர்த்த சொத்துகளும் இறுதி நாளில் இவ்வுலகை விட்டுப் பிரிகையில் நிலைத்து நம்மோடு வருவதில்லை. பேரானந்த நிலையே இறுதியில் நிலையானது.

- ஆண் என்பதும் பெண் என்பதும் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்ற பழைமைதானே தவிர, வேறில்லை. 'தான்' என்பதை அறியும் நிலையே பேரானந்தமாகும்.

- உலகில் மூலப்பொருளை, மௌனமாய் உணர்ந்து அறிந்தால், என்றும் இளமையாய் இருக்கும் நிலை உண்டாகும். அதுவே அமைதி நிலையாகும்.

### சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை. கீர்த்தி என்னும் சொல்லுக்குப் புகழ், இசை எனப் பல பொருளுண்டு. கீர்த்தனை என்பதை இசைப்பாடல் என்பர். இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் இது கீர்த்தனை எனப் பெயர்பெற்றது.

'சிந்து' என்ற பாடல் வகையே கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது.



கீர்த்தனைகளில் சுரத்தைவிடச் சொற்களுக்குத்தான் முதன்மை அளிக்கப்படுகிறது. இப்பாடல்கள் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று நிலைகளில் அமையப்பெறும். பதினேழாம் நூற்றாண்டில் தோன்றி, வளர்ந்த இச்சிற்றிலக்கிய வடிவம் பிற்காலத்தில் மக்களின் சிக்கல்களையும் பேசத் தொடங்கியது.

### குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள்

### தாய்தந்தையரை வணங்குதல்

*உடல்உயிர் சகலமும் நீர்தந்ததே யன்றி*
*உண்டோ இனிவேறு*
*அடரும் உலகெலாம் உமக்களித் தாலுமே*
*ஆமோ கைம்மாறு.*

*தேனினும் அமிர்தினும் இனிதே எனக்குநீர்*
*செப்பிய தாலாட்டு*
*வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல்*
*மங்களத் திருப்பாட்டு.*

*இரவு முழுதுமே தூங்கா திருந்துநீர்*
*எந்தனைக் காத்தீரே*
*அரவு முதற்பல ஜெந்துக் களால்வரும்*
*ஆபத்தைத் தீர்த்தீரே.*

*தோளினும் மார்பினும் இடையினு மேயெனைத்*
*தூக்கிக்கொண் டலைந்தீரே*
*நீள்பஞ்ச காலத்தில் உள்ளசோ றெனக்கிட்டு*
*நீர்பசித் துலைந்தீரே.*

*மண்பிள்ளை ஆயினும் தன்பிள்ளை யென்றெனை*
*மகிழ்ந்தா தரித்தீரே*
*பண்புடன் என்பொருட் டாகநீர் பலரையும்*
*பணிந்துப சரித்தீரே*

*எனக்கொரு சுகம்வரில் உமக்குவந் ததுபோல்*
*எக்களிப் படைந்தீரே*
*எனக்கொரு துயர்வரில் உமக்குவந் ததுபோல்*
*ஏங்கிஉள் ளுடைந்தீரே.*



11th Advance Tamil - FINAL.indd 19 14-02-2019 17:27:53

*இளமைப் பருவத்தில் என்னால்வருந் துன்பம்*
*எல்லாம் பொறுத்தீரே*
*தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந் துன்பம்*
*சகிப்பது பெருஞ்சீரே.*

*– மாயூரம் வேதநாயகர்*

இத்தகைய கீர்த்தனைப்பாடல்களைச் சமரச நோக்கோடு பாடியவர் மாயூரம் வேதநாயகர். இவர் பாடிய இசைப்பாடல் நூல் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' ஆகும். இந்நூலின் பெயருக்கு ஏற்ப, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இசைப்பாடல்களைப் பாடியுள்ளார். சமுதாயக்கருத்து, அறநெறிக்கருத்து, தாம் வாழ்ந்த காலத்துச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இந்நூலில் 192 கீர்த்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

வேதநாயகர் இவற்றை, தேவதோத்திரக் கீர்த்தனைகள், ஈசுவர வருடத்துப் பஞ்சத்தைப் பற்றிய கீர்த்தனைகள், ஹிதோபதேசக் கீர்த்தனைகள், உத்தியோக சம்பந்தக் கீர்த்தனைகள், குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள் என ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார்.

வேதநாயகர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே ஆங்கிலப் பயிற்சி பெற்றமையால், ஆங்கில அரசாங்கம் இவரை மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அமர்த்தியது. பின்பு, தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிமன்றத்தில் முன்சீப்பாகப் பணியாற்றினார். கி.பி. (பொ.ஆ.) 1876 ஆம் ஆண்டு வெளியான இவரின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம் ஆகும்.



*மாயூரம் வேதநாயகர்*

## பாடல் பொருள்

❖ என் உடல் உயிராகிய அனைத்தும் நீங்கள் தந்ததேயன்றி வேறில்லை. இதற்கு இப்பரந்த உலகம் முழுவதையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

❖ எனக்காக நீங்கள் பாடிய தாலாட்டுப் பாடல் தேனைவிட, அமிழ்தத்தைவிட மிகவும் இனிமையானது. இத்தகைய மங்களத் திருப்பாட்டு வானோர்க்கும் கிட்டாதது ஆகும்.

❖ இரவு முழுவதும் தூங்காமல் இருந்து, நீங்கள் என்னைக் காத்தீர்கள். பாம்பு முதலாகிய பல உயிரிகளால் எனக்கு வரும் துன்பத்தைப் போக்கினீர்கள்.

❖ செல்லும் இடங்களுக்கெல்லாம் தோளிலும் மார்பிலும் இடையிலும் என்னைத் தூக்கிச் சென்றீர்கள். மிகுந்த வறுமையுற்ற காலத்தில் உங்கள் பசியை மறைத்து எனக்குச் சோறளித்தீர்கள்.

❖ எத்தகைய குறைகள் இருப்பினும் உங்கள் பிள்ளை என்பதால் என்னை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டீர்கள். எனக்காக நீங்கள் பலரையும் பணிந்து பண்புடன் மரியாதை செய்தீர்கள்.

❖ எனக்கோர் இன்பம் வந்தால் அது உமக்கே வந்ததாக அகம் மகிழ்ந்தீர்கள். துன்பம் வந்தாலோ உமக்கே வந்ததாக இரங்கி மனமுடைந்தீர்கள்.

❖ இளமைப் பருவத்தில் என்னால் ஏற்பட்ட துன்பங்களைப் பொறுத்தீர்கள். நீங்கள் முதுமையுறும் காலத்தில் உங்களால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது நான் பெற்ற பெரும்பேறாகும்.



11th Advance Tamil - FINAL.indd 20 14-02-2019 17:27:53

# ஓவியப்பா

கவிபாடும் புலவர்களை, அவர்களின் கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். பொருளடி, பாவணி முதலியன தந்து, மற்றொருவன் பாடுக என்ற உடனே பாடுவோன் ஆசுகவி. பொருட்செல்வம், சொற் செல்வம், தொடை விகற்பம் செறிய, உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையுடன் அமுதமுறப் பாடுவோன் மதுரகவி. மாலைமாற்று, சுழிகுளம், நாகபந்தம், சக்கரம், எழுகூற்றிருக்கை முதலிய மிளிர கவி பாடுவோன் சித்திரகவி. மாலை, யமகம், கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியன விரித்துப் பாடுவோன் வித்தாரகவி. இத்தகைய கவிகளைப்பாடுவோர் பனுவர் எனப்பட்டனர்.

சித்திரகவியை 'ஓவியப்பா' என்றும் கூறுவர். சித்திரகவி என்பது தமிழில் காணப்படும் இலக்கிய வகைமைகளுள் ஒன்று. தொல்காப்பியம் குறிப்பிடும் 'வண்ணங்கள்' சித்திரகவிகளின் தோற்றுவாய். திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட 'திருவெழுகூற்றிருக்கை' ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரகவி. இவரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சித்திரகவிகளைப் பாடியுள்ளார். இவர்களின் வரிசையில் பாம்பன் சுவாமிகளும் சித்திரகவிகள் படைத்துள்ளார்.

ஓவியப்பாவின் வகைகளுள் 'நாகபந்தம்' என்பதும் ஒன்று. நாகப்பிணை என இதனைத் தனித்தமிழ்ச் சொற்களால் குறிப்பிடலாம். இரண்டு, நான்கு, எட்டு என நாகப்பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பது போலப் படம் வரையப்படும். பாடல் ஒன்றின் எழுத்துகள் நாகங்களின் தலையிலிருந்து வால் வரையில் உள்ள கட்டங்களில் எழுதப்பட்டிருக்கும். எந்த நாகத்தின் தலையிலிருந்து படித்தாலும் அதே பாடல் வரும்படி பாடலின் அமைப்பு இருக்கும். இவ்வாறு அமைக்கும்போது, கவிதையின் மொத்த எழுத்துகளும் சித்திரத்திற்குள் சுருங்கித்தோன்றும். சொல்வளம் மிக்கவர் இதனைப் பாடுவர்.

## இரட்டை நாகபந்தம்

இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்புணர்ந்து விளையாடுவன போலச் சித்திரம் வரைந்து, அப்பாம்பின் உருவங்களில் கணக்கிட்ட அறைகள் வகுத்துச் சந்திகளில் நின்ற அறைகளில் பொதுவான எழுத்துகளமையப் பாடப்படுவது, இரட்டை நாகபந்தம் ஆகும். இப்பாடலைப் பாம்பின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி வால்பகுதி வரைசென்று பொருள்காண வேண்டும்.

*"வாலு ளிருமூன்றும் தலையி லிரண்டெழுத்தும்*
*மூலைக ணான்கும் வயிறிரண்டும் ஐவைந்தாய்*
*நாலெட்டு நாலைந்தே ழாகி நடைபெறுமே*
*சேலிட்ட கண்ணாவின் சீர்."*

மேற்கண்ட வெண்பாவிலிருந்து இரட்டை நாகபந்தம் இயற்றுதலின் வரையறையை அறியலாம். இவ்வெண்பாவில் கூறப்பட்ட விதிகளின் அடிப்படையில் நாமும் இவ்வாறான பந்தங்களை உருவாக்கலாம். இவ்வகையில் அமைந்த பாடல்களிரண்டை அறிவோம்,


*"அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்*
*தெருளின் மருவாச்சீர்ச் சீரே – பொருவிலா*
*வொன்றே யுமயா ளுடனே யுருத்தரு*
*குன்றே தெருள வருள்"*

*"மருவி னவருளத்தே வாழ்சுடராய் நஞ்சு*
*பெருகொளியான் மேயபெருஞ் சோதித்– திருநிலா*
*வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த*
*மயரு மளவை யொழி"*



11th Advance Tamil - FINAL.indd 21 14-02-2019 17:27:54

மேற்கண்ட பாடல்கள் இரண்டும் இரட்டை நாகபந்தம் என்ற அடிப்படையில் அமைந்த பாடல்களாகும். இப்பாடல் இரட்டை நாகச் சித்திரத்தில் பொருந்தும் விதத்தினை இங்கு நோக்குவோம்.



இரட்டை நாகபந்தம்

### பாடலின் பொருள்

இரக்கத்தின் அழகிய வடிவமாக உள்ளவனே! திருச்சிற்றம்பலத்தில் நடனம்புரியும் இறைவனே! தேவர்களின் அறிவிற்கு எட்டாத (அறியவொண்ணாத) சிறப்பினையுடைய புகழை உடையோய்! பார்வதி தேவியுடன் கூடிய உருவத்தோடு அடியவர்களுக்குக் காட்சியளிக்கும் மலை போன்றவனே! நாங்கள்தெளிந்த மெய்யறிவைப் பெற அருள் செய்வாயாக.

மருவினவர் உள்ளத்தே வாழ்சுடரே! அடைந்தவர் மனத்திலே குடிகொண்டிருக்கும் ஒளியுருவமானவனே! விடத்தாலுண்டாகிய மிக்க ஒளியோடு பொருந்திய பெருஞ்சோதி வடிவமே! அழகிய நிலவின் ஒளி பொருந்திய பரந்த வானமும் சுருங்கும்படி மேலோங்கிய ஒளியே! திருமேனியாக வாய்ந்தோய்! மனமயங்கும் காலத்தை நீக்கி அருள்வாயாக!

## கலைச்சொற்கள்

Ability – ஆற்றல்
Abstraction – பொதுமைப்படுத்துதல்
Adjustment – பொருத்தப்பாடு
Affection – உணர்வுநிலை
Allegory – உள்ளுறை உவமம்
Alliteration – மோனை
Attitude – மனப்பான்மை
Balance – சமநிலை
Beauty – அழகு
Characteristics – சிறப்பியல்புகள்
Cognition – அறிவுநிலை
Concept – பொதுமைக் கருத்து
Conclusion – முடிவு
Conflict – முரண்பாடு
Consciousness – நினைவு நிலை
Creating the atmosphere – சூழ்நிலை காட்டும் முறை
Creativity – படைப்பாற்றல்
Critic – திறனாய்வாளர்
Diction – சொல்வளம்
Didactic – அறங்கூறும் கவிதை
Disposition – மனநிலை
Doctrine – கோட்பாடு
Emotion – உள்ளக்கிளர்ச்சி
Empathy – பிறர்நிலையில் தன்னைவைத்துப் பார்த்தல்
Environment – சூழ்நிலை
Epic – பெருங்காப்பியம்
Essence – பிழிவு



11th Advance Tamil - FINAL.indd 22 14-02-2019 17:27:54

| | | |
|---|---|---|
| Explanatory | – | விளக்கமுறை |
| Feeling | – | உணர்ச்சிக்கூறு |
| Figures of speech | – | அணிகள் |
| Hyperbole | – | உயர்வு நவிற்சி |
| Hypothesis | – | கருதுகோள் |
| Ideal level | – | குறிக்கோள் நிலை |
| Image | – | படிமம், உருக்காட்சி |
| Imitative | – | போலச் செய்தல் |
| Impulse | – | உள்தூண்டல் |
| Initiative | – | தான் தொடங்காற்றல் |
| Inspiration | – | அகத்தெழுச்சி |
| Intellect | – | அறிவாற்றல் |
| Introduction | – | அறிமுகம் |
| Introspection | – | அகக்காட்சி |
| Irony | – | வஞ்சப்புகழ்ச்சி |
| Knowing | – | அறிவுக்கூறு |
| Meanings | – | சொற்பொருள் |
| Memorization | – | மனப்பாடம் செய்தல் |
| Metonymy | – | ஆகுபெயர் |
| Metaphor | – | உருவகம் |
| Method | – | முறை |
| Metre | – | யாப்பு |
| Mood | – | உட்பாட்டுநிலை |
| Motive | – | ஊக்கி |
| Onomatopoetic | – | ஒலிக்குறிப்புள்ள |
| Perception | – | புலன்காட்சி |
| Personality | – | ஆளுமை |
| Phonetic Power | – | ஓசையாற்றல் |
| Poem | – | பாட்டு |
| Poetic | – | கவிதை மதிப்பு |
| Poetic Sympathy | – | கவிப்பரிவு |
| Poetic Value | – | கவிதை மதிப்பு |
| Poetry | – | கவிதை |
| Power | – | ஆற்றல் |
| Practice | – | பயிற்சி |
| Prose | – | உரைநடை |
| Prose poetry | – | வசனகவிதை |
| Prosody | – | யாப்பிலக்கணம் |
| Rhyme | – | எதுகை |
| Rhythm | – | ஒலிநயம் |
| Semantic Power | – | பொருளாற்றல் |
| Sensation | – | புலன் உணர்வு |
| Sentiment | – | பற்று, சுவை |
| Simile | – | உவமை |
| Stanza | – | பாசுரம், செய்யுள் பத்தி |
| Stimulus | – | தூண்டல் |
| Subjective | – | அகப்பொருள் கவிதை |
| Symbol | – | குறியீடு |
| Sympathy | – | பிறர்மீது இரக்கங்காட்டல் |
| Tendency | – | உளப்போக்கு |
| Theory | – | கொள்கை |
| Thought | – | எண்ணம் |
| Understanding | – | புரிந்துகொள்ளுதல் |
| Value | – | மதிப்பு |
| Verse | – | செய்யுள் |
| Willing | – | முயற்சிக்கூறு |

## அறிவோம் தெளிவோம்

இந்தியாவின் நாட்டுப்பண்ணை எழுதிய இரவீந்தரநாத்தாகூர் (1861–1941) இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிய கவிஞர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது "கீதாஞ்சலி " என்ற தொகுப்பிற்காக 1913இல் அவ்விருது வழங்கப்பெற்றது. மக்கள் இவரை அன்புடன் குருதேவ் என்று அழைத்தார்கள். அவருடைய மற்றொரு பாடலான "அமர் சோனார் பங்களா" நமது அண்டை நாடான வங்காளதேசத்தின் நாட்டுப்பண்ணாக உள்ளது.

### நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியக் கவிஞர்

கொல்கத்தாவைச் சேர்ந்த தாகூர், தமது எட்டாவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பதினாறாவது வயதில் இவரது முதல் கவிதைத் தொகுப்பினை பானுசிம்கா (சூரிய சிங்கம்) என்னும் புனை பெயரில் வெளியிட்டார். தாகூர் பிரித்தானிய அரசை எதிர்த்து நாட்டின் விடுதலையை ஆதரித்தார். அவரது பெயரும் புகழும், அவரது படைப்புகள் வாயிலாகவும், அவர் நிறுவிய விசுவபாரதி பல்கலைக்கழகம் என்னும் கல்வி நிறுவனத்தின் மூலமும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.



11th Advance Tamil - FINAL.indd 23 14-02-2019 17:27:54

## கண்ணாடி

9BBH62

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ஏட்டிலெழுதாக்கவிதை என அழைக்கப்படுவது

அ) நாட்டார் பாடல்கள் ஆ) சங்கப்பாடல்கள்

இ) கீர்த்தனைகள் ஈ) காப்பியப்பாடல்கள்

2. அழகிய சொக்கநாதர் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர்

அ) சித்திரகவி ஆ) சிலேடைப் பாடல் இ) அந்தாதிப்பாடல் ஈ) நாட்டுப்புறப்பாடல்

3. இரவு என்பதனைக் குறிக்கும் இரு சொல் இணையைத் தேர்ந்தெடுக்க

அ) கங்குல், பகல் ஆ) நிசி, பகல் இ) கங்குல், அல் ஈ) அல், பகல்

4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க

அ) சங்ககாலக் கவிதைகள் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

ஆ) சங்ககாலக் கவிதைகள் அறத்தை மட்டுமே பேசுகின்றன.

இ) சங்ககாலக் கவிதைகள் பக்திக்கவிதைகள் என்றழைக்கப்பட்டன.

ஈ) சங்ககாலக் கவிதைகள் பெரும்பாலும் குடிமக்களையே பாடுபொருளாகக்கொண்டன.

5. கூற்று: மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம்.

காரணம்: தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபித்துவம்.

அ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி.

இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

6. பொருத்துக

1. பாடுக என்றதும் பாடுவோன் – அ) சித்திரகவி

2. அலங்காரத்தோடும் ஓசையோடும் பாடுவோன் – ஆ) வித்தாரகவி

3. ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு பாடுவோன் – இ) மதுரகவி

4. விரிவாகப் பாடுவோன் – ஈ) ஆசுகவி

அ) 1–ஈ, 2– இ, 3–ஆ, 4–அ ஆ) 1–ஆ, 2–அ, 3–இ, 4–ஈ

இ) 1–ஈ, 2– இ, 3–அ, 4–ஆ ஈ) 1–இ, 2–அ, 3–ஈ, 4–ஆ



11th Advance Tamil - FINAL.indd 24 14-02-2019 17:27:54

## நிரப்புக

7. கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ள பாடல் வகை________.

8. வேதநாயகர் எழுதிய தமிழின் முதல் புதினம் ________.

9. நமக்காகத் தம் பசியைத் தொலைத்தவர்கள் ________.

10. முற்றுருவகப்பாங்கில் அமைந்து தெளிவானதோர் அகக்காட்சியை வழங்குவது_______.

11. படிப்பவர்தம் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வெவ்வேறு பொருளைத் தரும் உத்தி ________.

12. 'பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர்' எனப் பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் __________

13. 'எழுத்து ' கால புதுக்கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு _________.

14. 'மானுடம் பாட வந்தவர்கள்' என்று தங்களை அழைத்துக்கொண்ட கவிஞர்கள் --------.

15. 'ரென்கா' பாடல் மரபிலிருந்து தோன்றியது ________ கவிதைவடிவம்.

## குறுவினா

1. தொடக்க காலத்தில் தமிழில் புதுக்கவிதை முயற்சியை மேற்கொண்ட கவிஞர்கள் யாவர்?

2. எழுத்து இதழில் கவிதை படைத்தவர்களை எழுதுக.

3. கசடதபற இதழில் வெளியான கவிதைகளின் தன்மையை விளக்குக.

4. வானம்பாடி இதழ் எங்கு, எப்போது வெளிவந்தது?

5. வானம்பாடிக் கவிஞர்களைப் பட்டியலிடுக.

6. நாட்டுப்புறப்பாடல் என்பது யாது?

7. 'பூமியிலே விட்டாலே
   பொற்பாதம் நோகுமென்பாய்'- யார் யாரிடம் கூறியது?

8. சுந்தர கவிராயர் கண்ட மூன்று தலைகள் எவை எவை ?

9. கொழுமுகம் என்பது யாது ?

10. தனிப்பாடல்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகின்றோம் ?

11. குதம்பைச்சித்தர் பெயர்க்காரணம் கூறுக.

12. சிற்றிலக்கிய வகைகளுள் எவையேனும் நான்கனை எழுதுக.

13. இளமைப் பருவத்தில் நம்மால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டவர்கள் யாவர்?

14. சித்திரகவியின் தோற்றுவாய் பற்றி எழுதுக.

15. இரட்டை நாகபந்தம் என்றால் என்ன?



11th Advance Tamil - FINAL.indd 25 14-02-2019 17:27:54

## சிறுவினா

1. புதுக்கவிதையில் படிம உத்தியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. புதுக்கவிதை வலிமை பெறுவதற்கு உதவிய இதழ்கள் யாவை?
3. புதுக்கவிதையில் குறியீடு – குறிப்பு வரைக.
4. ஹைக்கூவின் வடிவம் குறித்து எடுத்துக்காட்டுடன் எழுதுக.
5. சென்ரியூ கவிதைக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
6. நாட்டுப்புறப்பாடல்கள் எந்தெந்தக் கலைவடிவங்களில் முகம் காட்டுகின்றன?
7. நாட்டுப்புறப்பாடல் பகுதியில் அமைந்துள்ள உவமையை விளக்குக.
8. 'புதையல்' என்னும் சொல்லில் மறைந்துள்ள சொற்களைப் பட்டியலிடுக.
9. சுந்தரகவிராயர் கண்ட புதுமையான காட்சியைப் பற்றி எழுதுக.
10. வரையறு : சூஃபித்துவம்.

## நெடுவினா

1. புதுக்கவிதையின் உத்திகளைத் தொகுத்து எழுதுக.
2. லிமரிக், லிமரைக்கூ – வேறுபடுத்துக.
3. பல்வேறு காலகட்டங்களிலான புதுக்கவிதையின் வளர்ச்சியினைத் தொகுத்து வரைக.
4. விறகொடிக்கும் பெண்ணின் வாழ்வியலை நாட்டுப்புறப்பாடல் வழிநின்று விளக்குக.
5. தாயன்பின் பெருமைகளை மகள் எங்ஙனம் எடுத்துரைக்கிறாள்?
6. 'கண்ணுள் மணியை'– பாடல் வழியாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
7. பேரானந்த நிலைகுறித்து ஆசியா உம்மா கூறும் வழிமுறைகளைத் தொகுத்தெழுதுக.

## படிப்போம் பயன்படுத்துவோம்

1. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

*கடலிடை எழுகதிர்த் திங்கட் காட்சி*
*மலையிடை ஒழுகும் அருவி வழங்கும்*
*செங்கண் கருங்குயில் சிறகடி பட்டே*
*பொன்னுதிர் வதுபோல் பூக்கள் உதிரும்*
*பூக்கொய் தோகையர் புதரிடை மயில்கள்*
*கழையாடு கூத்தன் கல்லாக் கடுவன்*
*முட்பலா தூக்கி முன்வரு மந்தி*
*முழவினை ஆர்க்கும் கூத்த முதியவள்*
*மான்பயில் சாரல் மலைவழி தாண்டி*



11th Advance Tamil - FINAL.indd 26 14-02-2019 17:27:54

*ஊணுக் காக ஒவ்வொரு நாளும்*
*பழுமரம் தேடும் பறவையைப் போலக்*
*கண்டதும் கேட்டதும் கற்றதும் எண்ணி*
*மண்டிய இருள்சூழ் மலர்தலை உலகில்*
*எண்ணி யெண்ணி இரவும் பகலும்*
*செஞ்சொல் உவமை சீர்தளை கூட்டிப்*
*பாப்புனைந் தளிக்கும் பைந்தமிழ்ப் புலவ!*

*– வாணிதாசன் கவிதைகள்*

வினாக்கள்

1. பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகளைக் குறிப்பிடுக.
2. பண்புத்தொகைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
3. கழையாடு கூத்தன், எழுகதிர்– இலக்கணக் குறிப்பு தருக.
4. உணவு என்னும் பொருள் தரும் சொல்லைப் பாடலிலிருந்து எழுதுக.
5. பைந்தமிழ்ப் புலவனின் செயல் யாது?

2. கீழ்க்காணும் குறிப்புகளைப் படித்துக் கட்டங்களை நிரப்புக. (ஒரு பொருள் பல சொல்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | |
| ■ | | ■ | | | 4 |
| | | | | 6 | ■ |
| | | ■ | 7 | | |
| | 3 | 8 | | | 9 |
| 5 | ■ | | | 10 | |

### இடமிருந்து வலம்

1. நிலவையும் சந்திரனையும் குறிக்கும் வேறு சொல். (4)
2. வயலையும் கழனியையும் குறிக்கும் வேறு சொல். (2)
7. மேகத்தையும் காரையும் குறிக்கும் வேறு சொல். (3)
8. உண்மையையும் மெய்யையும் குறிக்கும் வேறு சொல். (3)
10. வேளாண்மையையும் விவசாயத்தையும் குறிக்கும் வேறு சொல். (3)

### கீழிருந்து மேல்

3. தீயையும் அனலையும் குறிக்கும் வேறு சொல். (4)
5. களிப்பையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் வேறு சொல். (4)

### வலமிருந்து இடம்

4. குழந்தையையும் மகவையும் குறிக்கும் வேறு சொல். (3)
6. அழகையும் கவினையும் குறிக்கும் வேறு சொல். (3)

### மேலிருந்து கீழ்

9. உலகத்தையும் ஞாலத்தையும் குறிக்கும் வேறு சொல். (2)

3. கீழ்க்காணும் தொடர்களில் ஒவ்வொரு சொல்லாக நீக்கினாலும், முழுமையாகப் பொருள் அமையும்படி தொடர் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| எ.கா. உடற்பயிற்சி செய்வது உடலுக்கும் மனத்துக்கும் நல்லது. | | • உடற்பயிற்சி செய்வது மனத்துக்கும் நல்லது.<br>• உடற்பயிற்சி செய்வது நல்லது.<br>• உடற்பயிற்சி நல்லது. |
| 1 | மங்கல இசை முழங்க விழா இனிதே தொடங்கியது. | |
| 2 | நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும் என்பார்கள். | |
| 3 | குழந்தை மழலை மொழியில் கொஞ்சிப் பேசியது. | |
| 4 | அந்தப் பாடலைப் பாடியவர் யார்? | |
| 5 | நாள்தோறும் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வருக. | |

4. கீழ்க்காணும் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் பத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

எ.கா. கோட்பாடுகள்

கோ, கோட்பாடு, பா, பாட்டு, பாடு, கோடு, கோடுகள், கோள், கள், கடு, கட்டு.

1. நடைமுறைக்கல்வி – 2. விடுகதைகள் – 3. பாடநூல்கள் –

4. தமிழ்க்கலைக்களஞ்சியம் – 5. முகவரிச்சீட்டுகள் –

5. கீழ்க்காணும் கவிதைகளின் பாடுபொருள்/கருத்தைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| எ.கா.<br>வயலைப் பிரிக்கும் வரப்பு<br>கரையைத் தாண்டி விளையாடும் எலிகள்<br>– பொ.குமார்<br>கருத்து – இயற்கைக்குப் பிரிவினை இல்லை | அடர்ந்த இருட்டு<br>தனியாய்ச் செல்கையில்<br>கூடவே மின்மினி<br>– மு. முருகேஷ் | தோப்பை விற்றபின்<br>வாங்கிய வீட்டில்<br>தொட்டிச் செடிகள்<br>– தமிழ் மணவாளன் |
| அசை போடாமல் நிற்கிறது<br>வைக்கோலைத் தின்ற<br>வயல் பொம்மை<br>– அரவிந்தன் | குழந்தைகள் விளையாடும் மரத்தடி<br>பழத்தை நழுவ விடுகிறது<br>அணில்<br>– லிங்குசாமி | என்ன செய்து கிழித்தாய்?<br>நாள்தோறும் கேட்கும்<br>நாள்காட்டி<br>– பல்லவன் |



11th Advance Tamil - FINAL.indd 28 14-02-2019 17:27:54

6. சொற்களஞ்சியப் பெருக்கம்

எ.கா. உறை என முடியும் சொற்களைக் கண்டறிக

1. உடற்பாதுகாப்புக்காக அணியும் கவசம் – மெய்யுறை

2. உவமையில் ஓர் வகை – உள்ளுறை

படை என முடியும் பின்னொட்டுச் சொற்களைக் கண்டறிக.

1. பரிசு பெற்ற புலவர், மற்றொருவரை வழிப்படுத்துவது _________படை.

2. ஒளிவுமறைவின்றி நடைபெறும் செயலுக்குக் கூறுவது__________படை.

3. உறக்கத்தைக் குறிக்கும் சொல்_________படை.

4. பண்டைய அரசர்களின் பாதுகாப்புக்குதவியவை_____ ,______ , ____, ____படைகள்

5. உழவர் பயன்படுத்தும் கலப்பையைக் குறிப்பது_______ படை.

7. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கவிதை எழுதுக.

1. ஒவ்வோர் அடியிலும் மூன்று சொல் அமையும்படியும் மூன்றாவது சொல், மை என முடியுமாறும் எழுதுக.

எ.கா. சொல்லில் வேண்டும் இனிமை

சொல்லும் பொருளும் புதுமை

2. ஒவ்வோர் அடியிலும் மூன்று சொல் அமைத்து, அவற்றுள் ஏதாவது ஒரு சொல்லில் விலங்கு / பறவையின் பெயர் இடம்பெறுமாறு எழுதுக.

எ.கா. கூவும்போது குயில் அழகு

ஆடும்போது மயில் அழகு

3. மழை, நட்பு, குழந்தை, தொழிலாளி ஆகிய கருப்பொருள் சார்ந்து ஹைக்கூ கவிதை எழுதுக.

எ.கா. எழுத நினைத்த கவிதை

மறந்து போயிற்று

குழந்தை சிரித்தது

8. கீழ்க்காணும் ஓவியத்திற்குக் கவிதை ஒன்று இயற்றுக.



9. இதழ்களில் வெளிவரும் புதுக்கவிதைகளைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குக.

10. அண்மையில் நடைபெற்ற, உன் மனத்தை நெகிழச்செய்த நிகழ்வினை நவீன வடிவில் கவிதையாக்குக.




11th Advance Tamil - FINAL.indd 29 14-02-2019 17:27:54

## இணையச்செயல்பாடு

# நூல்கள் பல அறிவோம்

பிடிக்கும் நூலைப் படித்துப் பார்ப்போமா!


distribute this file, provided this header page is kept intact.

திருக்குறள்

1. அறத்துப்பால்

1.1 கடவுள் வாழ்த்து

1.1.1 கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1
கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2
மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

### படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'projectmadurai' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. இப்போது திரையில் நூல்களின் பட்டியல் தோன்றும். அதன் அருகில் pdf, Unicode, kindle (6–inch) ஆகிய மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.
3. அப்பட்டியலில் தேவைப்படும் நூலைத் தேர்வுசெய்து வாசிக்கலாம்.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :


படி 1


படி 2


படி 3

நூல்கள் பல அறிவோம் இணையப் பக்கத்தின் உரலி

http://www.projectmadurai.org/pmworks.html

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



11th Advance Tamil - FINAL.indd 30 14-02-2019 17:27:56